பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 10 2026 MONDAY 7.15 PM**

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

**1.** உலகளாவிய அமைதிக்கு இந்தியாவும் — சுவிட்சர்லாந்தும் தொடர்ந்து பாடுபடும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** தலைமைத் தேர்தல் ஆணையரை பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இடைக்கால உத்தரவை பிறப்பிக்க உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது.

**3.** இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

**4.** காங்கோவில் நேரிட்ட படகு விபத்தில் 30 பேர் உயிரிழந்தனர்.

**5.** 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியா 14-0 என்ற கோல் கணக்கில் ஈராக்கை வென்றது.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

உலகளாவிய அமைதிக்கு இந்தியாவும் — சுவிட்சர்லாந்தும் தொடர்ந்து பாடுபடும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லி வந்துள்ள சுவிட்சர்லாந்து அதிபர் திரு **Guy Parmelin-**னுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் இவ்வாறு கூறினார்.

சுவிட்சர்லாந்துக்கான ஏற்றுமதியை அதிகரிக்க இந்த பேச்சுக்களின்போது தீர்மானிக்கப்பட்டதாக திரு நரேந்திர மோடி கூறினார்.

***(Sound Byte — பிரதமர் (1) - 53 Sec.)***

சுவிட்சர்லாந்து தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

***(Sound Byte — பிரதமர் (2) - 42 Sec.)***

ஐரோப்பிய யூனியன் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் **10** லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

***(Sound Byte — பிரதமர் (3) - 49 Sec.)***

இந்த பேச்சுக்களுக்கு பின்னர் இந்தியா — சுவிட்சர்லாந்து இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

<<<<<<<>>>>>>>

உலகிற்கே வழிகாட்டும் திறனை சமஸ்கிருதம் கொண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று அயோத்தியாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கணிதத்திற்கான மொழியாக சமஸ்கிருதத்தை தாம் கருதுவதாகவும் தெரிவித்தார்.

அயோத்தியாவை யாத்ரிகர்களுக்கான தலமாக மட்டுமே தாம் கருதவில்லை என்றும், கலாச்சாரத்தின் அடையாளமாகவும் அது உள்ளது என்று திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<<>>>>>>

பள்ளிகளுக்கான தேசிய மனநலம் மற்றும் ஆரோக்கிய வரைவுக் கொள்கை குறித்து மத்திய கல்வி அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி இன்று அதிகாரிகளுடன் விரிவாக ஆலோசனை மேற்கொண்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தின்போது, மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் இந்த கொள்கையை வகுப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

பள்ளியில் சேரும் மாணவர்கள் ஒவ்வொருவரும் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதற்கான அம்சங்கள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டதாக திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

தொலைத்தொடர்புத் துறையில் இந்தியா முன்னணியில் திகழும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், **6-G** தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி வகிக்கும் என்று கூறினார்.

தொலைத்தொடர்பு உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்ட நிலை மாறி, தற்போது ஏற்றுமதி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் ஆறு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான கைபேசிகள் தற்போது உற்பத்தி செய்யப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<<>>>>>>

உச்சநீதிமன்றத்திற்கு புதிதாக மூன்று நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால், குஜராத் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திருமதி **Sunita Agarwal,** தில்லி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி **Devendra kumar Upadhyaya,** தெலங்கானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு **Aparesh Kumar Singh** ஆகியோர் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar**-ஐ பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இடைக்கால உத்தரவை பிறப்பிக்க உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது.

தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் தலைமையிலான அமர்வு இதுதொடர்பாக பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கும், தேர்தல் ஆணையத்திற்கும் உத்தரவிட்டுள்ளது.

நாளிதழில் வெளியான செய்திகளின் அடிப்படையில் எதிர்தரப்பு வாதங்களை கேட்காமல், இவ்வழக்கில் உத்தரவுகள் எதையும் பிறப்பிக்க இயலாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கையில் காவலில் வைக்கப்பட்டுள்ள **20** தமிழக மீனவர்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட **270** மீன்பிடி படகுகளை மீட்டுத்தர வேண்டும் என்றும் திரு விஜய் அந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

<<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேசத்திலிருந்து மாநிலங்களவைக்கு **10** உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக வரும் **16**-ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலில் பிஜேபி சார்பில் எட்டு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தேர்தலில், திரு **Dharampal Singh**, திரு **Radhakant Ojha**, திரு **Prakash Pal**, திரு **Vidyasagar Sonkar**, திரு **Gopi Krishna Pandey**, திருமதி **Priyanka Singh Rawat**, திரு **Ram Pratap Singh Chauhan**, திருமதி **Shruti Gangwar** ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று பிஜேபி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்த தேர்தலில் போட்டியிருக்கும் பட்சத்தில் வாக்குப்பதிவு வரும் **16**-ஆம் தேதி நடைபெறும் என்றும், அதைத்தொடர்ந்து வாக்கு

எண்ணிக்கை அன்றைய தினமே தொடங்கும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

இந்தியா — ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான கூட்டு ராணுவ பயிற்சி உத்தராகண்டில் இன்று தொடங்கியது.

இருநாடுகளை சேர்ந்த **92** பேர் இப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வரும் **18-**ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த கூட்டுப்பயிற்சி, பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் நடத்தப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மருத்துவத்திற்கான நோபல் பரிசு அமெரிக்காவின் **Karl Deisseroth,** ஜெர்மனியின் **Peter Hegemann** மற்றும் **Georg Nagel** ஆகிய மூவருக்கும் கூட்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒளியை பயன்படுத்தி குறிப்பிட்ட மூளை நரம்புகளின் செயல்பாடுகளை கட்டுப்படுத்த உதவும் கண்டுபிடிப்புகளுக்காக இந்த விருது அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

காங்கோவில் நேரிட்ட படகு விபத்தில் **30** பேர் உயிரிழந்தனர். **12** பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

**Ubangi** -விலிருந்து, **Kinshasa**-விற்கு சென்று கொண்டிருந்த படகு, மற்றொரு படகு மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>

**17** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியா **14-0** என்ற கோல் கணக்கில் ஈராக்கை வென்றது.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியில், **Anushka Kumari 5** கோல் அடித்தார்.

**Silky Sorokhaibam** மற்றும் **Abhista Basnett** தலா இரண்டு கோல் அடித்தனர்.

-------------

சீன **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Thakkar** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **9-11, 9-11, 11-7, 11-5, 12-10** என்ற செட் கணக்கில், பிரான்சின் **Simon Gauzy**-ஐ வென்றார்.

------------------

**ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று ஆட்டநேர இறுதியில், இந்தியா முதல் இன்னிங்சில் 2 விக்கெட் இழப்பிற்கு 38 ரன் எடுத்துள்ளது.**

**அகமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 174 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.**

**Tanmay Baloda அபாரமாக பந்துவீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.**

**<<<<<<<END>>>>>>**